புதிய பள்ளிகள்

*477 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் அப்பாவரம் கிராமத்தில் பள்ளிக் கட்டடம் ஆயத்தமாக இருந்தும், பள்ளி தொடங்குவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அப்பாவரம் கிராமத்தில் 1972–73-ல் புதிய பள்ளி துவக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்படிப் பள்ளிக்கூடங்களைத் துவக்குவதற்கு வேண்டிய வசதிகளை மக்கள் செய்து கொடுத்தால், அவைகளைத் துவக்குவதற்கு அரசு உடனடியாகப் பரிசீலித்து அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊர் மக்கள் பள்ளிகளைத் திறப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தாலும், அங்கே பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு வேண்டிய கட்டட வசதி, மாணவர்கள் வருகை, மற்ற பிற வசதிகளை எல்லாம் பார்த்துத்தான் அனுமதி அளிக்கப்படும். மக்களிடம் இருந்து புதிய பள்ளிகளைத் திறப்பதற்கு விண்ணப்பம் வந்தால் இந்த வசதிகள் எல்லாம் இருக்கின்றனவா என்பதை மாவட்டக் கல்வி அதிகாரிகள் மூலம் பரிசிலனை செய்து, அதன் பின்னால் தான் முடிவு செய்யப்படும்.

*478 வினா.—திரு. என் கிட்டப்பா, மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி 22-வில்லியநல்லூரில் ஒரு உயர்நிலைப் பள்ளி அமைத்திட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. நா வீராசாமி : தலைவரவர்களே, 1973–74 ஆம் ஆண்டில் நம்முடைய தமிழ்நாட்டில் புதிதாக எத்தனை உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புதிதாக 40 உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்குவதற்கான திட்டம் இருக்கிறது. அந்தக் கணக்கைப் பார்த்தால் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒரு பள்ளி என்ற அளவில்தான் வரும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய மாவட்டத்திற்கு அதிகமாகக் கேட்கமாட்டார் என்று நினைக்கிறேன்.